Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின்
செயல்முறை நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.M.ஸ்ரீதர், B.E., M.Plan.,

ந.க.எண்.2037/2019/விம நாள்:30.06.2020

பொருள்: மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – விழுப்புரம் மண்டலம் – விழுப்புரம் மாவட்டம் – விழுப்புரம் வட்டம் – கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் – சோழாம்பூண்டி கிராமம் – ச.எண்கள்.198/4A, 198/4B, 198/5, 198/10A, 198/10B, 198/10C – ஆகியவற்றில் 2.21 ஏக்கர் (அ) 8946.80 ச.மீ பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1) மனுதாரர் திரு.S. ராஜாராம், விழுப்புரம் அவர்களின் விண்ணப்பம் நாள்:20.12.2019 (Online Application No. 201905301014705 dt.10.10.2019)
2) அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை (M.A-1) நாள்: 04.02.2019
3) அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 16.06.2003.
4) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/LA2, நாள் 19.04.2012 மற்றும் 24.05.2012.
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14619/1988/பிசிசி, நாள் 27.04.1988.
6) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40483/2000/எல் ஏ2, நாள்: 07.11.2002.
7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.16985/2000/எல்ஏ2, நாள் 29.09.2007.
8) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12544/2014/சிபி, நாள் 04.07.2014.
9) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD4(3)] துறை நாள்:04.05.2017
10) இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்:27.12.2019 (திறந்தவெளி பொது ஒதுக்கீடு கட்டணம் செலுத்தக் கோரியது)
11) மனுதாரர் திறந்தவெளி பொது ஒதுக்கீடு கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நாள்:31.12.2019
12) வட்டார வளர்ச்சி அலுவலர், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.ஆ4/209/2019 நாள்:26.02.2020
13) இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்:16.12.2019 (நன்னிலை வரி செலுத்தக் கோரியது)
14) மனுதாரர் நன்னிலை வரி செலுத்தி விபரம் பெறப்பட்ட நாள்:18.12.2019

உத்திரவு:

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம், சோழாம்பூண்டி கிராமம், ச.எண்கள்.198/4A, 198/4B, 198/5, 198/10A, 198/10B, 198/10C - ஆகியவற்றில் 2.21 ஏக்கர் (அ) 8946.80 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் கோரி பார்வை 1—ல் காணும் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனைப்பிரிவில் அமையும் உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பார்வை (2)ல் கண்டுள்ள அரசாணையின்படி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் (0.68%) பொது ஒதுக்கீடு 'A' என குறிப்பிட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை கோலியனூர் ஊராட்சி ஒன்றிய தானப்பத்திரம் எண்.945/2020 நாள்:25.02.2020 மற்றும் தானப்பத்திரம் எண்.1908/2020 நாள்:08.06.2020—ன் படி ஒப்படைப்பு செய்து அதற்கான விபரம் பெறப்பட்டுள்ளது.

மேலும், பார்வை (2)ல் கண்டுள்ள அரசாணையின்படி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் (0.62%) 'B' என குறிப்பிட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை (TANGEDCO) விழுப்புரம் மின் பகிர்மான வட்டம் தற்கால விழுப்புரம் மேற்பார்வை பொறியாளர் தானப்பத்திரம் எண்.1403/2020 நாள்: 17.02.2020—ன் படி ஒப்படைப்பு செய்து அதற்கான விபரம் பெறப்பட்டுள்ளது.

பார்வை (2)ல் காணும் அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை (M.A-1) நாள்: 04.02.2019—ன்படியான தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகளின்படி, பொது ஒதுக்கீட்டிற்கான தொகையினை நில வழிகாட்டு மதிப்பீட்டின்படி 1 ச.மீ—க்கு ரூ.58/— வீதம் 360 ச.மீக்கு தொகை ரூ.21,000/—(ரூபாய் இருபத்து ஓராயிரம் மட்டும்) உரிய அரசு கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை (13)ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் உத்தேச மனைப்பிரிவு ஒப்புதல் குறித்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் செலுத்த கோரப்பட்டு பார்வை (14)ல் காணும் மனுதாரர் கடிதத்தில் நன்னிலை வரி கட்டணமாக ரூ.17,400 —(ரூபாய் பதினேழாயிரத்து நானூறு மட்டும்) SBI, விழுப்புரம் கிளையில் 20.06.22020 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

மனுதாரர் கொடி நாள் நிதிக்காக ரூ.5,000/— (ரூபாய் ஐயாயிரம் மட்டும்)in favour of Armed Force Flag day fund, Villupuram என்ற பெயரில் வரைவோலையின் (Demand Draft No.673787 அசல் நாள்:22.06.2020 மற்றும் மனுதாரர் பெயரில் ரூ.5,000/— (ரூபாய் ஐயாயிரம் மட்டும்)—க்கு சிறுசேமிப்பு பத்திரம் நாள்:22.06.2020—ன் நகல் பெறப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(விம)எண்.27/2020 என எண்ணிடப்பட்டு இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், பார்வை (5) மற்றும் (6)ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பார்வை (3)ல் காணும் அரசாணையின்படி இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள

மனைப்பிரிவு நிபந்தனை எண் 19(இ),(உ)குறித்து உறுதி செய்த பின்னரே உள்ளாட்சி மன்றம் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பார்வை (9)ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள விதி எண்.3—ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/— மற்றும் விதி எண்.9—ன்படி அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நில பயன் மாற்றக் கட்டணமாக கீழ் காணும் அரசுக் கணக்குத் தலைப்பின் கீழ் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

Head of Account: (Land use Conversion Charge)

0217 Urban Development - 60
Other Urban Development Schemes 800
Other Receipts-AS Receipts Under
Land use conversion charges -27
Non Taxation fees – 09 collections.
DPC: 0217-60-800-AS – 2790

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது, மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)—ன்படி, அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms.No.71, RDLA dated 16.06.2003 & G.O.No.134,M.A.WS, dated 20.09.2002 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

பார்வை (12)ல் காணும் ஊராட்சி ஒன்றிய கடிதம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் இடத்தினை தனி புல உட்பிரிவு பெற ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

ஒதுக்கீடு விபரம்	பரப்பளவு	விழுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு:	2.21 ஏக்கர் (அ) 8946.80 ச.மீ	
கோரிய மனைகள்:	58	
ஒதுக்கிய மனைகள்:	57	
மனுதாரர் விற்பனைக்குரியது		
கடை	109.38 ச.மீ	---1.22%
பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டவை		
A	46.55 ச.மீ	---0.68%
B (TANGEDCO)	42.92 ச.மீ	---0.62%

சிறப்பு நிபந்தனைகள்:

1) பார்வை 8-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சிறப்பு நிபந்தனையின்படி "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்துவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

2) உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா என்பதை செயல் அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3) மனுதாரரால் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்கா பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சியின் சொத்து கணக்கில் பதிவு செய்யப்பட்டதன் விவரத்தினை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளை மனுதாரர் மற்றும் உள்ளாட்சி கடைபிடிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

4) மனைகள் மற்றும் சாலைகள் அங்கீகரிக்கப்பட்டு <u>ம.வ/ந.ஊ.உ.இ(விம) எண். 27/2020</u> எண்ணிடப்பட்டுள்ள வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.

கோலியனூர் ஊராட்சி ஒன்றியத்தால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திர பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உத்தேச மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம், மனைப்பிரிவு வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு வட்டார வளர்ச்சி அலுவலர், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், உத்தேச மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட ஆணையின் நகலையும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு

ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் –2 தொகுப்பு

30/6/2020

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மண்டலம்,
விழுப்புரம்.
30/6/2020

பெறுநர்:

1) வட்டார வளர்ச்சி அலுவலர்,
கோலியனூர் ஊராட்சி ஒன்றியம்,
விழுப்புரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

2) சார்பதிவாளர்,
விழுப்புரம் சார்பதிவாளர் இணை எண்.2
சார்பதிவாளர் அலுவலகம்,
விழுப்புரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

நகல்:

திரு.S. ராஜாராம்
எண்.27/16, மஹாவிஷ்ணு தெரு,
விழுப்புரம் - 605 602
விழுப்புரம் மாவட்டம்.

கோலியனூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மற்றும்
சோழாம்பூண்டி ஊராட்சி தனிஅலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.எஸ்.பரிமேலழகன் பி.எஸ்.சி,

ந.க.எண் : ஆ4/ 209/2020 நாள் 30.09.2020

பொருள்: அனுமதியற்ற மனை வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் சோழாம்பூண்டி கிராமம் ச.எண்:198/4A,198/4B,198/5,198/10A,198/10B,198/10C ஆகியவற்றில் 2.21ஏக்கர்(அ)8946.80ச.மீ பரப்பளவு கொண்ட பெயரிடப்படாத மனைப்பிரிவு மொத்த மனைகளின் எண்ணிக்கை 1 to 57 மனைகளுக்கு வரன்முறைப்படுத்தி உத்தரவிடுதல் – சார்பு

பார்வை:
1. அரசாணை எண் 79,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(UD4(3))துறை, நாள்:04.05.2017
2. நகர்ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:13193/2017/எல்ஏ2, நாள்:07.01.19.
3. அரசாணை எண் 172,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(UD4(3))துறை, நாள்:13.10.17
4. அரசாணை எண் 21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:05.02.2019
5. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,விழுப்புரம். ந.க.எண்: 2037/2019/விம, நாள்:30.6.2020.
6. இணைசார் பதிவாளர், விழுப்புரம் அவர்களின் நன்கொடை ஆவணம் பதிவு எண். 945/2020. நாள்: 25.02.2020. மற்றும் பதிவு எண் 1908/2020 நாள் 08.06.2020
7. கருவூலச் சீட்டு செலுத்தப்பட்ட நாள் : 30.09.2020

*****

உத்தரவு:

பார்வை 2-ல் காணும் கடிதத்தில் நகர்ப்புற ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் சோழாம்பூண்டி கிராமம் ச.எண்:198/4A,198/4B,198/5,198/10A,198/10B,198/10C ஆகியவற்றில் 2.21 ஏக்கர் (அ)8946.80 ச.மீ பரப்பளவு கொண்ட பெயரிடப்படாத மனைப்பிரிவு மொத்த மனைகளின் எண்ணிக்கை 1 to 57 மனைகளுக்கு ஒப்புதலளிக்கும் பொருட்டு மனைப்பிரிவு கட்டமைப்பு வரைபடங்கள் கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் திரு.S.ராஜாராம் விழுப்புரம் என்பவருக்கு சொந்தமான ச.எண்:198/4A,198/4B,198/5,198/10A,198/10B,198/10C ஆகியவற்றில் 2.21 ஏக்கர் (அ)8946.80 ச.மீ பரப்பளவு கொண்ட பெயரிடப்படாத மனைப்பிரிவு மொத்த மனைகளின் எண்ணிக்கை 1 to 57 மனைகளுக்கு ஒப்புதலளிக்கும் பொருட்டு மனைப்பிரிவு வரன்முறை செய்திட வரன்முறை கட்டணம் பார்வை 7 -ல் காணும் விவரப்படி கட்டணம் உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

1. மனைப்பிரிவு வரன்முறை படுத்துதல் கட்டணம் அரசாணை எண் 79 ன்படி 2.21 ஏக்கருக்கு மொத்த மதிப்பீடு தொகை 518245/- ரூபாயில் 3/-வீதம் தொகை ரூ.15547 /- ரூபாய் மற்றும் கூராய்வு கட்டணம் 1000 சேர்த்து மொத்த தொகை 16547/- அரசு கணக்கு(DPC:217-60-800-AS-2790) தலைப்பில் 30.09.2020 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் உள்ள பூங்கா மற்றும் பொது இடங்கள் கோலியனூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு தானமாக கீழ்கண்ட விவரப்படி பெறப்பட்டுள்ளது
(சார்பதிவாளர்,விழுப்புரம் ஆவண எண்: 945/2020 நாள் 25.02.2020 மற்றும் பதிவு எண் 1908/2020 நாள் 08.06.2020

மனைப்பிரிவில் உள்ள (TANGEDCO)விழுப்புரம் மின் பகிர்மான வட்டம் தற்கால விழுப்புரம் மேற்பார்வை பொறியாளர் தானப்பத்திரம் எண் 1403/2020 நாள் 17.02.2020-ன் படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது

எனவே கீழ்கண்ட விவரப்படி மனைப்பிரிவினை மனுமத்து வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது

ஒதுக்கீடு விபரம்

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	2.21 ஏக்கர் அல்லது 8946.80 ச.மீ
கோரிய மனைகள்	58
ஒதுக்கிய மனைகள்	57

மனுதாரர் விற்பனைக்குரியது

கடை 109.38 ச.மீ ---1.22%

பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டவை

பூங்கா	A: மனை எண் 58	- 46.55.00 ச.மீ	---0.68%
(TANGEDCO)	B: -------	- 42.92 ச.மீ	--- 0.62%

இந்த வரன்முறை உத்தரவு சோழாம்பூண்டி கிராமம ச.எண்:198/4A,198/4B,198/5,198/10A,198/10B,198/10C ஆகியவற்றில் 2.21 ஏக்கா (அ)8946.80 ச.மீ பரப்பளவு கொண்ட பெயரிடப்படாத மனைப்பிரிவு மொத்த மனைகளின் எண்ணிக்கை 1 to 57 மனைகளுக்கு ஒப்புதலளிக்கும் பொருட்டு மனைப்பிரிவு கொண்ட 8946.80 ச.மீ பரப்பளவு கொண்டவற்றிக்கு மட்டுமே பொருந்தும். நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் அவர்களின் மண்டல அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கு மாறாக எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது. மேலும் வரன்முறை செய்யப்பட்ட கட்டணம் குறைவாக இருப்பின் மீள புதிய கணக்கீடு செய்யப்பட்டு தொகை செலுத்த வேண்டுமென தெரிவிக்குப்பட்சத்தில் மனுதாரர் அரசு தலைப்பில் செலுத்திட வேண்டும்.

நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமாப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால்(அ)மனைக்கு இறுதி ஒப்புதல் வழங்குதலில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனை பிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

S-[signature] 30/9/2020
தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ).
ஊராட்சி ஒன்றியம்,கோலியனூர்

பெறுதல்

திரு.S.ராஜாராம் [signature] 30.9.2020.
எண் 25சிவசங்கரி தெரு, விழுப்புரம்
விழுப்புரம் மாவட்டம்

நகல் உதவி இயக்குநர் நகர ஊரமைப்பு துறை,விழுப்புரம் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல்: உதவி இயக்குநர்(ஊராட்சிகள்)விழுப்புரம் அவர்களுக்குத் தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது

நகல்: வட்டாட்சியர் விழுப்புரம் வட்டம் அவர்களுக்குத் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(மண்டலம்-III)ஊராட்சி ஒன்றியம் கோலியனூர்.

நகல் ஊராட்சி செயலாளர், சோழாம்பூண்டி

நகல் ஆ4 பிரிவு கோப்பிற்கு



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate